சென்னை, அடையாறு மீனளப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அடையாறு மீனளப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெண்களைக் கேலி செய்து வருவதை அரசு அறியுமா?

(இ) இதன் காரணமாக, 1973 மார்ச் 25 அளவில் மோதல்கள் ஏற்பட்டனவா?

(உ) ஆமெனில், அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆத்திரமுற்ற 300 பேருக்கு மேற்பட்ட கூட்டத்தினர் சென்னை மீனளத்துறை உதவி இயக்குநரது (மீனவர் பயிற்சி நிலையம்) அலுவலகக் கட்டிடத்தைத் தாக்குவதாக அவரிடமிருந்து தொலைபேசிச் செய்தி வரப் பெற்றதன் பேரில், சென்னை (வட்டார) மீனளத்துறை துணை இயக்குநர், காவல் துறையுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, இதில் தலையிட்டு இந்த இடத்திற்கு காவலர் படை ஒன்றை அனுப்பி அமைதியும் பாதுகாப்பும் அளிக்குமாறு கேட்டார். காவலர் உதவியுடன் இயல்பான நிலை திரும்பியது.

Cantonment Areas

*257 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) the cantonment areas in the State and their total extent;

(b) whether they have been exempted from State taxation; and

(c) if so, the details thereof n

பாளையப் பகுதிகள் (cantonment areas)

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள பாளையப் பகுதிகளும் (cantonment areas) அவற்றின் பரப்பளவும் யாவை?

(இ) மாநில வரிவிதிப்பிலிருந்து அவற்றிற்கு விலக்களிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மேலவைத் தலைவரவர்களே, (அ) மாநிலங்களில் உள்ள கண்டோன்மென்ட் பகுதிகளின் எண்ணிக்கை, மொத்தப் பரப்பளவு ஆகிய விவரங்கள் பற்றிய பொருள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது மாநில அரசின் அனுமதியின் கீழ் வருவதில்லை.

(இ) & (உ) "கண்டோன்மென்ட்" பகுதி மத்திய அரசினரால் கண்டோன்மென்ட் சட்டம், 1924-ன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருவதால் கேள்வியில் கேட்கப்பட்டுள்ள பிற விவரங்களுக்கு பதில் அளிக்க இயலவில்லை.

Agitation of the Power-loom Weavers in Somanur

* 258 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the power-loom weavers are agitating in Somanur, Coimbatore District for the increase of their daily wages;

(*b*) whether any representation has been received from them; and

(*c*) if so, the action taken thereon?

சோமனூரில் விசைத்தறி நெசவாளர்களின் போராட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விசைத்தறி நெசவாளர் தங்களது தினக்கூலியை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்து, கோயம்புத்தூர் மாவட்டம், சோமனூரில் போராட்டம் நடத்தி வருகிறார்களா?